



நேற்று (16.8.2025) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 26வது மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சேலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.





அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று (16.8.2025) தருமபுரிக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் தலைமையில்

## மாதவரம் 23வது வட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் துண்டு பிரசுரங்கள்!

### புழல் எம்.நாராயணன் வீடு வீடாக வழங்கினார்!

சென்னை, ஆக.17-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 23வது வட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பட வேண்டி வீடு வீடாக துண்டு பிரசுரங் களை திமுகவினர் வழங்கினார்கள்.

மாதவரம் சட்டமன்றத் தொகுதி 23வது வட்டத்திற்குட்பட்ட காவாங்கரை சங்குபதி திருமண மண்டபத்தில் வருகின்ற 19.8.2025 காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

இந்த முகாமை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ துவங்கி வைக்கிறார். இந்த முகாமில் 13 துறைகளின் சார்பில் 48 சேவைகள் அரசால் நிறைவேற்றப்பட உள்ளது. அனைத்து மனுக்களுக்கும் 45 நாட்களில் தீர்வு காணப்படும் என்று அறிவித்ததன் பேரில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என்று 23 அ வட்ட கழகத்திற்குட்பட்ட காவாங்கரை, கண்ணப்ப சாமி நகர் உள்ளிட்ட பகுதிகளில் 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் தலைமையில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மற்றும் கழகத்தினர் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களைவழங்கினார்கள்.

ஆதிதிராவிட நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை, வீட்டு வசதி வாரியம், நகராட்சி நிர்வாக துறை, உள்ளாட்சித் துறை, மின்சாரம், பட்டா போன்ற அடிப்படை வசதிகள் குறித்து பொதுமக்கள் தங்களது மனுக்களை நேரடியாக வந்து சமர்ப்பிக்க வேண்டு மாறு வீடு வீடாக கழகத்தினர் பொது மக்களை கேட்டுக் கொண்டனர்.

மேலும் விடுபட்டுள்ள கலைஞர் உரிமைத் தொகைக்கான மனுக்களையும் பொது மக்கள் வழங்கி பயன் பெறலாம் என்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

இந்த நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் அ. ராமச்சந்திரன், எம். உசேன் மைதீன், முத்துகிருஷ்ணன், பார்பன், ஹரி, அம்மு மூர்த்தி, அமுதா, ஜெய பாரதி, வைலட்ராணி, சுதா மற்றும் கழகத்தினர், அரசு அதிகாரிகள் மற்றும் மாநகராட்சி ஊழியர்களுடன் சென்று துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

துண்டு பிரசுரங்களை பெற்றுக்கொண்ட பொது மக்கள் திராவிட மாடல் ஆட்சியில் இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், மகளிர் இலவச பேருந்து பயணம், நம்மை காக்கும் 48, நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் போன்ற திட்டங்களினால் எல்லா வகையிலும் பொது மக்களுக்கு நன்மை நடக்கிறது, எனவே முதலமைச்சரின் சிறப்பு திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் நாங்களும் கலந்து கொண்டு பயன்பெறுகிறோம். என்று உறுதி அளித்தனர்.

### பூண்டி மேற்கு ஒன்றியத்தில்

## உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம்!

### வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. நல உதவி வழங்கினார்!

திருவள்ளூர், ஆக. 17-

திருவள்ளூர் தொகுதி பூண்டி மேற்கு ஒன்றியம் இராமஞ்சேரியில் எல்லப்ப நாயுடு பேட்டை, காரணி நிசாம் பட்டு, குன்னவலம், இராமஞ்சேரி ஊராட்சிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் கலந்து கொண்டு பொது மக்களுக்கு நல உதவிகளை வழங்கினார்.

இதில் வட்டாட்சியர் (பொறுப்பு) பரமசிவம், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுலோச்சனா, பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், ஒன்றிய செயலாளர்கள் கூளூர் எம்.இராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி.எஸ். நேதாஜி, டி.மோதிலால், ஒன்றிய கழக நிர்வாகிகள் கே. பாஸ்கரன், இ.இலட்சுமணன், சித்ரா ரமேஷ், தா.நடராசன், காஞ்சிப்பாடி பி.சரவணன், எம்.எழிலரசன், வி.எஸ்.சதீஷ், ஆர்.தனசேகர், ஆர்.எஸ்.சுதாகர், சீனிவாசன், ஆர்.எஸ்.பழனி, ஏ.பழனி, மகி, ஏழுமலை, பரதன், தமிழ்மணி, கஜேந்திரன், எல்லப்ப நாயுடு பேட்டை முருகன், காரணி நிசாம்பட்டு கருணாநிதி, பிரிதிவி, குன்னவலம் நாகன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.





Star Signs 044-43 55 48 47

மறக்க முடியுமா – 9

தாய்மை பெண்மை நலமாகட்டும்!
தலைவரின் பெருமையை தாலாட்டட்டும்!!

நாள் : 17.08.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி
இடம் : லஷ்மி மஹால், புரசைவாக்கம்,

தலைமை
இராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி
மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர்

முன்னிலை
பி.கே.சேகர்பாபு
மாவட்ட கழக செயலாளர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
(ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்

சொ.வேலு எம்.சி வி.சுதாகர் கோ.ஏகப்பன் கே.எஸ்.எம்.நாதன்
புனிதவதி எத்திராசன் எம்.சி சரிதாமகேஷ்குமார் எம்.சி கோ.மணி
அ.நிர்மலாதேவி சுதாதீனதயாளன் எம்.சி டாக்டர்ஜி.சாந்தகுமாரி எம்.சி
ஜி.வி.நாகவள்ளி எம்.சி பரிதிஇளம்சுருதி எம்.சி ஜி.தாமோதரன்
எல்.சுந்தர்ராஜன் எம்.சி க.வினோத் கே.கோகுல்

கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குபவர்
முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி
கழக கல்வியாளர் அணிச் செயலாளர்

மேயர் பிரியா ராஜன் தயாநிதி மாறன் எம்.பி
இ.பரந்தாமன் எம்.எல்.ஏ கே.எஸ்.இரவிச்சந்திரன்
தமிழன் பிரசன்னா பி.எம்.யாழினி

நன்றியுரை
சு.மனோகர் ந.பாலு
வட்ட கழக செயலாளர்கள்

அழைத்து மகிழும்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க மகளிர் அணி – மகளிர் தொண்டரணி